# சென்னை மெட்ரோ ரயில்களில் நவீன கிருமி நாசினி தெளிப்பு

**சென்னை, அக். 22–**

கொரோனா தொற்று பரவாமல் தடுக்க, மெட்ரோ ரயில்களில், வேதியியல் ஊறு விளைவிக்காத கிருமி நாசினி தெளிக்கப் படுகிறது.

ஊரடங்காமல் நிறுத் தப்பட்ட, மெட்ரோ ரயில் சேவை, சென்னையில், செப்., 7ம் தேதியில் இருந்து, மீண்டும் இயக் கப்படுகிறது.

கொரோனா தொற்று பரவாமல் தடுக்க, நிலை யங்கள், ரயில்களில், உரிய இடைவெளியில், கிருமி நாசினி தெளித்து, சுத்தப் படுத்தப்பட்டு வருகிறது.

அவ்வாறு சுத்தப்படுத் தும் போது, வேதியியல் ஊறுவிளைவிக்காத நீர் வடிவிலான கிருமி நாசினி, இந்தியாவில், முதன் முயற்சியாக, சென்னை மெட்ரோ ரயில் நிறுவ னத்தால் பயன்படுத்தப் படுகிறது.

நவீன இ.டி.ஏ., தொழில் நுட்பத்தால் வெளிப்படும் பிராணவாயு கலந்த, நுண் ணிய நிறமற்ற திரவ வடி விலான கிருமிநாசினி, வேதியியல் தன்மையை முற்றிலும் தவிர்க்கிறது.

இந்த கிருமி நாசினி பயன்படுத்தும்போது, கைகளில் மட்டுமல்ல, சுற் றுப்புறங்களிலும், காற்றி னால் கிருமிகள் பரவலை தடுக்கிறது. இது, மிக வும் தூய்மையான, பாது காப்பான கிருமி நாசினி முறையாகும்.



மெட்ரோ ரயிலில் நவீன கிருமி நாசினி தெளிக்கப் படுகிறது

மருத்துவமனைகள் மற் றும் பாதுகாப்பு அமைப் புகளில் மட்டுமே, இந்த கிருமி நாசினி பயன்படுத்தப்படும்.

இது, வழக்கமான குளோரின் பயன்பாடு களை விட, 51 சதவீதம் கூடுதல் சக்தி வாய்ந்தது என, மெட்ரோ ரயில் நிறு வனம் தெரிவித்துள்ளது.